கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

முதலாம் வருட பொதுக் கலைமாணித் தேர்வு (வெளிவாரி) - 2004/05
(ஒக்டோபர்/நவம்பர் – 2006)

SOC 101 – சமூகவியலும் மானிடவியலும் - ஓர் அறிமுகம்

நேரம்: 3 மணித்தியாலங்கள்

ஏதாவது ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

1. சமூகவியல் என்றால் என்ன என்பது பற்றி சமூகவியல் அறிஞர்களது வரைவிலக்கணங்களை ஆதாரமாகக் கொண்டு ஒரு கட்டுரை வரைக.

2. சமூகவியல் ஒரு கற்கைத்துறையாக வளர்ச்சியடைந்த நிலையை வரலாற்று அடிப்படைகளின் துணைகொண்டு விளக்குக.

3. சமூகவியல் ஒரு விஞ்ஞானமா என்பது பற்றி ஆராய்ந்து இது ஏனைய சமூக விஞ்ஞானங்களுடன் கொண்டுள்ள தொடர்புகளை விளக்குக.

4. சமூக இடையூடாட்டம் (Social Interaction) என்பதனால் நீர் விளங்கிக்கொள்வது என்ன? இது தற்கால சமூகத்தில் எத்தகைய முக்கியத்துவம் வாய்ந்தது என்பது பற்றிக் குறிப்பிடுக.

5. "சமூகமயமாதல் என்பது மனிதர்களுக்கு மிக முக்கியம்" என்ற கூற்றை அறிஞர்களது கருத்துக்களோடு ஆராய்க.

6. சமூக நிறுவனங்களில் மிக முக்கியமான மூன்றைப்பற்றி தற்கால செயல்பாட்டுடன் தொடர்புபடுத்தி விளக்குக.

7. "மானிடவியல்" ஏன் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு கற்கை நெறி என்று டெயிலர் (Tylor) கூறுகின்றார். அவரின் கருத்துக்களின் துணைகொண்டு விரிவான விடை எழுதுக.

8. நான்கிற்கு மாத்திரம் சிறுகுறிப்பெழுதுக.

    அ). பண்பாடு (Culture)
    ஆ). சமூக மாற்றம் (Social change)
    இ). சமூகப்படையாக்கம் (Social Stratification)
    ஈ). சமூகவியல் குழுக்கள்
    உ). சமூக நியமங்கள்/சமூக நெறிமுறைகள் (Social Norms)
    ஊ). துர்க்கைம் கூறும் தற்கொலை.

********